RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21422

OPEN ACCESS

# உவமைகள் வழி அறியலாகும் சங்க இலக்கியப் பண்பாடுகள்

**அ. பழனியம்மாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636 011, தமிழ்நாடு, இந்தியா.

# Etiquettes of Cultural Parables in Sangam Literature

**A. Palaniammal [a, *]**

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem–636 011, Tamil Nadu, India.

* Corresponding Author: palaniammaltamil@gmail.com

Received: 14-07-2021
Revised: 13-09-2021
Accepted: 16-09-2021
Published: 05-10-2021

**ABSTRACT**

Sangam literature are used to clearly understand the development of civilized society and literary richness or off luence. The literature named after the parable can be said to be sangam literature. We call a parable, an analogy that composes one object to another. We could find this kind of analogy in writings of noble laureates naturally this parable is nurtured with human birth. Through the beautiful usages of parable in sangam literary pieces one can see the growth of culture. The parable is the supreme tool for cultivating culture and the key used to open the springs of emotions to the pinnacle of languages. Through this research article we come to know how parable works as the highly appreciatable tool of language and how it can beanty one's writing.

**Keywords:** Sangam, Literature, Tradition, Culture, Parable, Heritage, Nature, Life Style, Politics, History

## முன்னுரை

உவமை என்பது ஒரு பொருளைப் பிறிதொரு பொருளுக்கு ஒப்பிட்டுக் கூறுதல் அதாவது, தெரிவிக்க விரும்பும் பொருளைத் தெரிந்த பழைய பொருளோடு, உவம உருப்புகளைப் பயன்படுத்தி கூறுவன உவமையாகும். இத்தகைய உவமைகள் பண்பாட்டை விளக்கும் கருவிகளாகச் செயல்படுகின்றன. இயற்கை எல்லைகளாலும், செயற்கை வாழ்முறைகளாலும் வேறுபட்டு கிடக்கும் நாடுகளுக்கும், மக்களுக்கும் இடையே அனைத்துலக மானிடம் அடங்கிக் கிடப்பதைப் பார்த்து `யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடியவர் கணியன் பூங்குன்றனார். அவருடைய மனதில் ஒற்றுமை உணர்வு உள்ளதை அறியமுடிகிறது.

தமிழர்கள் சங்க இலக்கியங்களைப் போற்றினர். தமிழரின் சிறப்பையும், பண்பாட்டையும் உணர்த்தும் காலச் சுவடுகளாக எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் திகழ்கின்றன. மனிதன் தன் பண்பாட்டையும், மொழியையும் உச்ச நிலைக்கு வளர்த்துக் கொள்ளத் தோன்றிய கருவியே உவமை ஆகும். அந்த வகையில் சங்க இலக்கியங்களில் காணப்படும் பண்பாடு சார்ந்த உவமைகளைக் கீழ்வரும் ஐந்து பகுப்பின் மூலம் எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. அவை 1. மரபு உவமைகள், 2. இயற்கை உவமைகள், 3. வரலாற்று உவமைகள், 4. அரசியல் உவமைகள், 5. வாழ்வியல் உவமைகள் என்பவையாகும்.

## உவமைகள்

உவமைகள் என்பது படைப்பாளருக்கு ஏற்பவும், படைக்கப்படுபவருக்கு ஏற்பவும், பொருளுக்கு ஏற்பவும், படைப்புச் சூழல், நோக்கம் போன்றவற்றிற்கு ஏற்பவும் பலவகைப்பட்டு அமைதல் கூடும். உவமைகள் பொருளைப் புலப்படுத்துவதோடு அப்பொருளைச் சிறப்பிக்கக் கூடிய முறையில் உயர்ந்தனவாக அமைதல் வேண்டும் (Srinivasan, 1973). பொருளின் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த உவமையைக் கையாளுவதே சிறந்தது என்பதை,

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' ' (தொல்.உவமை.நூ.எ.276)

என்ற நூற்பாவால் அறியலாம் (Balasubramanian, 2019). உலக வழக்கில் இகழ்ந்ததெனக் கருதப்பெறும் பொருளை உவமையாக எடுத்தாள வேண்டிய சூழல் ஏற்படும் போது, அதன் கண் அமைந்த உயர்ந்த தன்மையினையே ஒப்புமையாகக் கொண்டு உயர்ந்த குறிப்புப்பட உவமம் செய்தல் வேண்டும் என்பதைக் குறிப்பால் புலப்படுத்தியுள்ளனர் இலக்கணநூலார். எனவே மிக இழிந்ததெனக் கருதும் பொருளை உவமையாகக் கொள்ளும் மரபு இலக்கிய உலகில் மிகவும் குறைவு எனலாம்.

உவமை, உவமம், உவமானம் மூன்றும் ஒரே பொருளைத் தரும் சொற்களே எனினும் அவற்றிற்கிடையே நுட்பமான வேறுபாடு உண்டு. 'உவமை' என்ற சொல்லிற்கு உவத்தல் என்றும், உவமம் என்ற சொல்லிற்கு உவமை கூறுதல் என்றும், உவமானம் என்பதற்கு உவமையாகக் கூறப்பட்ட பொருள் என்றும் வேறுபாடு கொள்ளலாம்.

## மரபு உவமைகள்

மரபு மொழியமைப்பிலும், மொழிக்கலையாகிய இலக்கியத்திலும் பெற்றிருக்கும் செல்வாக்கு மிகப்பெரியதாகும். இலக்கியத்திலும் இலக்கணத்திலும் மரபு பெற்றிருக்கும் செல்வாக்கைத் தொகுத்துக் காட்டும் நூலே தொல்காப்பியம்,

"வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிப்
புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல்"

(தொல். சிறப்புப்பாயிரம்- பக். 11)

என்று பனம்பாரனார் பாடிய தொல்காப்பியப் பாயிரம், தொல்காப்பியம் மரபுகளின் தொகுப்பு நூலே என்பதைப் பறைசாற்றுகிறது (Balasubramanian, 2019). தொல்காப்பியருக்குப் பின் வந்த நன்னூலார்,

"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

(நன். நூ.எ. 388)

என்கிறார் (Soma Elavarasu, 2017). அந்த வகையில் முன்னோர்கள் கூறியதை கேட்டு பின்பற்றுதல் நல்ல பண்பாடும் ஆகும். எனவே சங்க இலக்கியங்களில் புலவர்கள் கையாண்டுள்ள மரபு சார்ந்த உவமைகளைக் கீழ்க்கண்ட சான்றுகளின் மூலம் அறியலாம்.

சங்கப்புலவர்கள், ஒருவர் கூறிய உவமை என்பதற்காக மற்றொருவர் மாற்றிக் கூறாமல், பழைய உவமைகளையே சில பொருள்களின் புனைவில் மரபாகப் பின்பற்றுகின்றனர். மரபு உவமைகளில் பெண்களின் உறுப்புக்கள் முக்கிய இடம்பெறுகின்றன. பெண்களின் உறுப்புக்கள், சில குறிப்பிட்ட பொருள்களையே உவமையாகக் கொண்டு முடிமுதல் அடிவரை மரபு மாறாமல் புனையப் பெறுகின்றன.

பெண்களின் உறுப்புகளில் கண்களுக்கு மற்ற உறுப்புக்களிலும் மிகுதியாக மரபு உவமைகள் வருகின்றன. கண்ணுக்குக் குவளைமலர், தாமரை, நெய்தல் மலர், அம்பு, வேல், மாவடு, கயல் முதலியன உவமைகளாகச் சுட்டப்பட்டுள்ளன.

நற்றிணையில் குறிஞ்சித்திணையில் கபிலரின் பாடலில், தலைவன் தன் நெஞ்சிற்கு உரைக்கும் போது,

"குவளை உண்கண் மகிழ்மட நோக்கே"

(நற். பா. 77/12)

தலைவியின் குவளைமலர் போன்ற மையுண்ட கண்களின் மகிழ்ச்சி மிக்க மடப்பம் பொருந்திய பார்வை நம்மை அவளிடத்தே செலுத்தியது என்கிறான் (Balasubramanian, 2004).

தலைவனோடு ஊடிய தலைவியை மகிழ்வித்து, அவள் உடன்பாடு பெற தலைவன் தலைவி கேட்பது போல,

"குவளை உண்கண் ஏஎர் மெல்லியல்"

(ஐங். பா.72/3)

குவளை போலும் மையுண்ட கண்கள் என்று பாராட்டுகிறான்.

குடவாயிற் கீரத்தனார் பாடலில், தலைவிக்கு தோழிகூறும் பொழுது,

"குவளை உண்கண் இவளொடு செலற்கு"

(அகம். பா. 129/16)

என்ற வரியில் குவளைப் போன்ற கண்கள் எனச் சுட்டப்படுகின்றன.

புரியவீழ் நறுநீலம்புரையுண்கண்

(கலி. பா.15/20)

என்ற கலித்தொகை வரியிலும் இதனை அறியலாம்.

கண்கள் பற்றிய மரபுவமைகள் மிகுதியாக இருப்பதற்குக் காரணம் கண் காமத்தின் நுழைவாயிலாய் அமைந்ததே ஆகும் (Dhatshinamurthy, 2004; Jayabal, 2004; Viswanathan, 2004).

## இயற்கை உவமைகள்

பண்டையத் தமிழர்கள் பொருட்களை முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்று பொருள்களில் அடக்கினர். உரிப்பொருளாகிய வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவே இலக்கியங்கள். உருவாக்கப்பெற்றன. இயற்கை, உவமை வாயிலாகவும் மனித வாழ்க்கையோடு சங்க இலக்கியங்களில் தொடர்புபடுத்தப்படுகிறது. அத்தகைய உவமைகளே இயற்கை உவமைகள் என்ற பாகுபாட்டில் எடுத்துரைக்கப்படுகின்றன.

நற்றிணையில் தலைவியைச் சந்திக்கத் தலைவன் தோழியை அணுகுகின்றான். தோழி தலைவியைத் தலைவன் விரைவில் வரைந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தால் மறுத்துக் கூறவே தலைவன் தோழியிடம்,

"அகல் இரு விசும்பின் அரவும் குறைபடுத்த
பசுங்கதிர் மதியத்து அகல் நிலாப் போல
அளகம் சேர்ந்த திருநுதல்"

(நற். பா. 377/6-8)

என்று தலைவியை இயற்கையோடு உவமைப்படுத்தி கூறுகிறான் (Balasubramanian, 2004).

"பெய்த புலத்துப் பூத்த முலைப்

பசுமுகைத் தாது நாறும் நறுநுதல்"

(குறுந். பா. 323/ 4-5)

நறிய நுதலையுடைய தலைவியின் தோள்களில் துயிலப் பெறாத நாட்கள் இன்பம் என்ற உள்ளீடில்லாத பதர் போன்றன என குறுந்தொகையில் இயற்கை உவமையாக எடுத்துரைக்கப்படுகிறது.

"பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்தின்"

(குறுந். பா. 68/1)

நிலத்தின் மேல் சிறிதளவே வெளித்தோன்றும் உழுந்தின வேர்க்குக் குறும்பூழ்ப் பறவையின் கால் வண்ணத்தாலும், வடிவாலும் அளவாரும் உவமையாக இயற்கைக்கு இயற்கையே உவமையாகச் சுட்டப்பட்டுள்ளது (Nagarajan, 2004).

"பழம்போற் சேற்ற தீம்புழல் உணீஇய" (அகம். பா. 17/ 13-14) "உளைமான் துப்பின் ஓங்கு திணை" (அகம்பா. 102/1) "முளைவாள் எயிற்ற வள்ளுகிர் ஞமலி" (குறிஞ்சிப் பா. 131) "வேம்பு நனையன்ன நெடுங்கட்கள்வன்" (ஐங். பா.30/1) இதுபோன்று சங்க இலக்கியங்களில் பல உவமைகள், இயற்கைக்கு இயற்கையே உவமையாக சுட்டப்பட்டுள்ளது.

"பெயின் நந்தி வறப்பின்சாம் புலத்திற்குப் பெயல்போல் யான்

செலின் நந்தி செறின் சாம்பும் இவள்"

(கலித். பா.78/19-20)

தலைவன் பரத்தையர் சேரி சென்று திரும்பி வந்த பொழுது காமக்கிழத்தி அவனோடு சண்டையிட்டாள். பின்னர் ஊடல் தீர்ந்து கூறும்போது, பரத்தையுடைய நலம், மழை பெய்யின் விளைச்சல் கொடுத்து, அது பெய்யாமல் இருக்கும் போது வறண்டு அழகு கெட்டு அழியும் விளை நிலத்திற்கு உள்ள மழைபோல, தலைவன் அங்கு சென்றால் அழகினால் செருக்குற்றும், அவன் செல்லாக்கால் வருந்தி இவள் வாடுவாள் என மழையை உவமைப்படுத்தி கூறுகின்றாள்.

உலகிலுள்ள இயற்கைப் பொருட்களைப் பார்க்கும்போது வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் தன்மை சங்கப்புலவர்களிடத்து மிகுதியாக இருந்தன என்பதையும், உண்மையை விளக்க உவமைகளைக் கையாண்டனர் என்பதையும் அறியமுடிகிறது.

## வரலாற்று உவமைகள்

எண்ணத்தை வெளியிடத் தோற்றுவிக்கப்பெற்ற மொழி, நாளடைவில் எண்ணத்தையே வளர்க்கும் கருவியாக வளர்ந்தது போலக் கருத்தை வெளியிடும் உத்தியாகப் பிறந்த வரலாற்றுவமைகள் வரலாற்றை வெளியிடும் நோக்கத்திற்காகவே கையாளப்பெறும் நிலைக்கு வளர்ச்சிபெற்ற பாங்கு சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

திருமாவளவன் பகைவர்மேல் வேலைச் செலுத்தும் ஆற்றலுடையவன், தலைவன் கடக்க இருக்கும் காடு அவ்வளவன் செலுத்திய வேல் போன்று கொடுமையானது என்பதை (பட்டினப்பாலை - 299-300) என்ற பாடல் வரிகளில் அறியலாம்.

தென்னவன் காட்டரண்களைக் கெடுத்து ஆநிரை கவரும் கள்வர்களின் தலைவன், பல போர்களை வென்றவன். இவனுடைய தென்னாட்டின் மலைக்குகையில் பக்கத்தில் அருவி வீழும். அம்மலைக் குகையில் வரையர மகளிர் மறைந்திருப்பர். அவர்களைப் பெறுதல் அரிது. அதுபோலத் தலைவியும் பெறுவதற்கு அரியவள் என்பதனை, (அகம் பா. 342/4-12) என்ற பாடல் வரிகளில் அறியலாம் (Jayabal, 2004).

செழியன் முசிறியை முற்றுகையிட்டு வென்றான். அப்போர்க்களத்தில் புண்பட்ட வீரர் அழுகையைப் போலத் தலைவி இரவும் பகலும் இடைவிடாது அழுதாள் என்பதனை (அகம் பா.37/ 14-19) என்ற பாடல் வரிகளில் எடுத்தாளப்பட்டுள்ளன (Jayabal, 2004).

அகப்பொருளான காதலைப் பாடும் முறையில் புறப்பொருளான வரலாற்றைப் புகுத்தும் புதுமை சங்க இலக்கியத்தின் தனிச்சிறப்பாகும். புறப்பாடல்களைக் காட்டிலும் வரலாற்று உவமைகள் அகப்பாடல்களிலேயே அதிகம் உள்ளன.

சங்க இலக்கியங்களில் இதுபோன்ற வரலாற்று உவமைகள் அதிகம் நிறைந்துள்ளன. விரிவஞ்சி சில சான்றுகள் மட்டுமே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## அரசியல் உவமைகள்

சங்க இலக்கிய உவமைகளின் வாயிலாகச் சில அரசியல் செய்திகளையும் அறியமுடிகிறது. விழுப்புண் பெறுதலே வாழ்வின் குறிக்கோளாகவும், களிறு ஒன்றையாவது கொல்லுதலே ஆண்மகனாக பிறந்தவனுக்குரிய கடமையாகவும் கருதியமை சங்ககால வாழ்வின் தனிச்சிறப்பாகும். வீரமும், வீரம் காரணமாகப் பெறும் புகழும் வாழ்வின் குறிக்கோளாகக் கருதப்பெற்றன.

கலித்தொகையில், நாட்டை ஆள்பவர் கலக்கமுற்றால் நாடு துன்பப்படும் என்ற செய்தியை, தலைவியின் அழகிழந்த முகத்திற்கு உவமையாகக் கூறப்படுகிறது. இதனை,

“ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்

பாழ்பட்ட முகத்தோடு பைதல் கொண்டு அமைவாளோ”

(கலி 5 /12-13)

என்ற வரிகள் காட்டுகின்றன (Viswanathan, 2004).

வேண்டிய பொழுதில் பால்சுரந்தூட்டும் தாய் போல வேண்டிய காலத்து மழைபெய்தல் அரசனின் செங்கோலால் வாய்க்கும் என்ற பகுதி (கலித். பா.99/4-7) கலித்தொகையில் வருகிறது (Viswanathan, 2004).

நாட்டிற்கு நல்லவராகவும், பகைவர்க்குத் தீயவராகவும் இருப்பது அரசனின் இயல்பாகும். சேர்ந்தாரைக் காத்தலும், பகைவரை அழித்தலும் வேந்தனின் இன்றியமையாத கடமை ஆகும்.

தன் நாட்டிற்கு மதியமாகவும், பகைவர்களுக்கு ஞாயிறாகவும் மன்னன் விளங்க வேண்டிய முறையினைப் புறப்பாடல் ஒன்று பின்வருமாறு உணர்த்துகிறது.

“தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்

ஒண்கதிர் ஞாயிறு போலவும்

மன்னிய பெரும”

(புறம். பா.6 /27-29)

அரசன் எந்நாளும் எவ்விடத்தும் உண்மை தவறாதவனாக வாழ வேண்டும் என்னும் வேந்தனின் இயல்பை (கலி. பா. 100/7-8) கலித்தொகை உவமைக் காட்டுகிறது (Viswanathan, 2004).

சங்க இலக்கியத்தில் இடம்பெறும் அரசியல் உவமைகளால் அக்கால அரசியற் கொள்கையினை அறியமுடிகிறது.

## வாழ்வியல் உவமைகள்

உவமைகள் அனைத்துமே வாழ்வியல் சார்ந்தவை தான் என்றாலும், அவற்றில் உணவு, உடை, இருப்பிடம் வாழ்வின் அடிப்படை ஆதாரங்களாக இருக்கின்றன.

நெல்லே உணவிற்கு அடிப்படையாக இருப்பதால், அவற்றைக் குறித்த உவமைகள், கீழ்காணும் சான்றுகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன.

“கடுப்புடைப் பறவைச் சாதியன்ன

பைதற விளைந்த பெருஞ் செந்நெல்”

(பெரும்பாண். 229-230)

என்ற அடிகளால் பெருஞ்செந்நெல்லும்,

“சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படுவத்தம்”

(பெரும்.305)

என்ற அடியால் கருடன் சம்பா நெல்லும்

“பொன்னறைத் தன்ன நுண்ணோர் அரிசி”

(மலைபடு-532)

பொன்துகள் போன்ற சிறிய வகை அரிசி தரும் நெல்லும் சங்கத் தமிழ்நாட்டில் விளைந்த சில நெல்மணிகளின் வகைகள் என்பதனை அறிகிறோம்.

உடைகளில் பல வகைகள் காணப்படுகின்றன. ஆடவர்க்கும், மகளிர்க்கும் என பலவகை உடைகள் பிரித்துப் பேசப்படுகின்றன. அதேபோல் செல்வர்க்கும் வறியவர்க்கும் உரிய பல வகை உடைகள் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது (Mohan, 2004).

செல்வர்களின் ஆடைச்சிறப்பை (மதுரைக் பா. 431-433) என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

“தெண்திரை அவிர் அறல் கடுப்ப ஒண்பல்

குறியவும் நெடியவும் மடி தரூஉ விழித்து”

(மதுரைக். 519-520)

என்ற அடிகளால் விசிறி மடிப்பே அன்றிப் புடவை பற்றிய செய்தியும் அறியப்படுகிறது. குறவர் மரப்பட்டையை உடையாகக் கொண்டனர் என்பதை (நற். பா. 64/4-8) என்ற பாடலில் அறியமுடிகிறது.

இதன் வழி வாழ்வியலின் அடிப்படை ஆதாரங்களின் தகவல்களை அறிய பயன்படும் உவமைகளின் முக்கியத்துவத்தை அறியலாம்.

## முடிவுரை

சங்ககால மக்களிடம் ஒப்புமை உணர்வு மேலோங்கி இருந்தன என்பதை அறியமுடிகிறது. சங்க இலக்கியங்களில் பண்பாட்டு வளர்ச்சிக்கு உவமை இன்றியமையாத கருவியாக செயல்பட்டுள்ளது என்பதை உணரமுடிகிறது. சங்க இலக்கியங்களில் உவமைகள் அதிகம் உயர்வானதாகவே சுட்டப்பட்டுள்ளதை அறியலாம். மரபு உவமைகளை பயன்படுத்துவதில், சங்ககாலப் புலவர்கள் ஒப்புமை உணர்வோடு இருந்த பான்மையை ஒருவர் பயன்படுத்திய உவமைகளை மற்றொருவர் பயன்படுத்துவதில் இருந்து அறியலாகிறது. மனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்வையே மேற்கொண்டான். தலைவன், தலைவியைச் சுட்டும் போதும், இயற்கையைச் சுட்டும் போதும், இயற்கை உவமைகள் பெரிதும் பங்காற்றி வருகின்றன. சங்க இலக்கியங்களில், நீண்ட வரலாற்று நிகழ்வை, சுருக்கமாக வெளிப்படுத்த, வரலாற்று உவமைகள் பயன்பட்டுள்ளமையை உணரமுடிகிறது. அரசனின் செங்கோல், ஆட்சி, இயல்பு, கடமை என அனைத்தும், உவமைகள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. வாழ்வியல் உவமைகளில், வாழ்வியலுக்கு அடிப்படை ஆதாரமாக திகழும், உணவு, உடை, இருப்பிடம் என்பனவற்றை அறிய சிறந்த கருவியாக செயலாற்றி உள்ளதை அறியமுடிகிறது. இதன் வாயிலாக

சங்க இலக்கியங்களில் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இன்றியமையாதக் கூறாக உவமை இருப்பது குறித்து இவ்வாய்வு கட்டுரையில் நிறுவப்பட்டுள்ளது.

## References

KV. Vae. Balasubramanian, (2019) Tholkappiyam, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

Soma Elavarasu, (2017), Nanool (Eluthu), Manivasagar Publications, Chennai, India.

Ra. Srinivasan, (1973), Sanga illakiyathil uvamaigal, Aniyagam Publications, Chennai, India.

A. Dhatshinamurthy, (2004) Ainguru Nooru, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

V. Nagarajan, (2004) Kurunthokai, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

Ku. Vae. Balasubramanian, (2004) Natrinai, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

R. Jayabal, (2004) Agananuru, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

R. Mohan, (2004) Pathupattu, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

A. Viswanathan, (2004) Kalithokai, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License